# தேவஇயல்

## பழைய ஏற்பாட்டில் தேவனுடைய பெயர்கள்

'god' என்பது ஆராதனைக்குரிய ஒரு பொருள் என்று அர்த்தப்படுகின்றது. அதுவே 'GOD' என்று பெரிய எழுத்துக்களில் எழுதப்படும்பொழுது அது ஒரே மெய்யான ஜீவனுள்ள தேவனை குறிப்பிடுகின்றது. மற்றவர்கள் 'தேவர்கள்' என்று அழைக்கின்றவர்கள் உண்டு; ஆனால் பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு. அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது (1 கொரி 8:6). பரலோகபிதாவின் சொந்த பெயரானது யாத்திராகமம் 3:15-ல் "YHWH (யாவே)' கர்த்தர் என்று அமைக்கப்பட்டுள்ளது. தலைமுறைதோறும் இதுவே என் நாமம்; என் பேர் பிரஸ்தாபம். "YHWH (யாவே)' இந்த நான்கு எழுத்துக்களை தேவன் எப்படி உச்சரித்தார் என்பது அறியப்படுவதில்லை. ஆனால் அவற்றின் அர்த்தமானது 'என்றென்றும் பிரகாசிக்கின்றது' என்பதாகும். அது அவர் 'இருத்தலுக்கு காரணமாகின்றது' என்று அர்த்தம் தரும். இது தேவனுடைய படைப்பின் வல்லமையை அறிவிப்பதாக அமையும். இது அவரது முடிவற்ற தன்மை மற்றும் அவரது சுய நிறைவு மற்றும் அவரது சுயாதீனமான தன்மை ஆகியவற்றை அறிவிப்பதாக அமையும். "என்னை தவிர தேவன் இல்லை" (ஏசாயா 44:6). நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர் (சங் 90:2). எல்லைக்குட்பட்ட நமது சிந்தனைகளினால் அவர் எப்படி இருக்க வந்தார் என்று விளக்குவது இயலாததாக உள்ளது (எபிரேயர் 11:6). ஆனால், அவர் இருந்தார், இருக்கின்றார் மற்றும் இருப்பார் என்பதால் நாம் எவ்வளவு நன்றி உள்ளவர்களாக இருக்கின்றோம் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர் தொடர்ந்து இருந்து நம்மில் அன்பு கூறுவார் என்றால் நாமும் நித்தியத்திற்கும் இருப்போம் என்ற நம்பிக்கை உள்ளது. நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள் என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவானவர் சொன்னார் (யோவான் 14:19).

வேதாகமத்தின்படி மனித இனத்தில் தேவனுடைய சொந்த பெயரை முதன் முதலாக பேசியது ஏவாளே! அவள் காயீனின் பிறப்பை அறிவித்தபோது: நான் கர்த்தரால் ("YHWH-யாவே)' ஒரு மனுஷனைப் பெற்றேன் என்றாள் (ஆதி 4:1). அவளது பேரன் ஏனோஸ் கர்த்தரின் நாமத்தைத் ("YHWH-யாவே)' தொழுதுகொள்ள தொடங்கினான் (ஆதி 4:26). ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் பிறரும் "YHWH-யாவே' என்ற பெயரைப் பற்றி பேசினர் (ஆதி 14:22; 15:2, 24:7; 26:28; 27:27; ; 28:16; 30:24; 31:49) ஆனால் இவர்களில் யாரும் "YHWH-யாவே' என்ற இந்த நான்கு எழுத்துக்களில் மூடி வைக்கப்பட்டிருந்த மாபெரும் அர்த்தத்தை அறிந்து இருக்கவில்லை (யாத் 6:3). இந்த நான்கு எழுத்து சொல்லின் தனிச்சிறப்பை தேவன் மனிதர்களில் முதன்முதலாக மோசேக்கு தான் விளங்கப்படுத்தினார். "இருக்கிறவராக இருக்கிறேன்" என்று சொன்னார் (யாத் 3:14). கர்த்தர் தம்முடைய சொந்த விரல்களினால் "உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்" என்று (யாத் 20:7) எழுதியபோது பரிசுத்த நாமத்திற்கான பயபக்தி குறிப்பிடப்பட்டது. தேவனுடைய நாமத்தை நிந்தித்த ஒரு மனிதன் (லேவி 24:11,16) கல்லெறிந்து கொல்லபட்டான். இருப்பினும் கர்த்தர் தம்முடைய நாமத்தை உச்சரிக்ககூடாது என்று சொல்லவில்லை ஆனால் அது பரிசுத்தமாய் காக்கப்படவேண்டும் என்று மட்டுமே அவர் குறிப்பிட்டிருந்தார். அப்படியிருந்தும்கூட பரிசுத்த வசனத்தில் "YHWH-யாவே' என்ற பெயர் காணப்படும் ஒவ்வொரு இடத்திலும் 'கர்த்தர்' என்ற பெயரை பதிவு செய்யும் பழக்கத்தை எபிரெயர்கள் வளர்த்துக்கொண்டனர். இதன் விளைவாக முன்பு நன்கு அறியப்பட்டிருந்த தகுதியான உச்சரிப்பானது மனித அறிவிலிருந்து மறைந்து போயிற்று. மோசேயுடன் "YHWH-யாவே' என்ற சொல்லை தேவன் எவ்விதம் உச்சரித்தார் என்பதை இன்றைய நாளில் எவர் ஒருவரும் அறிவதில்லை. 'யெகோவா' என்பது கடவுள் விரும்பும் ஒரு தனிப்பட்ட பெயர். நாடுகடத்தப்பட்ட காலத்திற்குப் பின் அது மிகவும் புனிதமானது என்று கருதத்தொடங்கியது எனவே இந்த பெயருக்குப் பதிலாக அவர்கள் கி.பி 6 மற்றும் 7 ஆம் நூற்றாண்டில் 'அடோனாய்' என்ற பெயரைப் பயன்படுத்தினர். 'யாவே' என்ற மெய்யெழுத்துடன் 'அடோனாய்' என்ற வார்த்தையின் உயிரெழுத்துக்கள் சேரும்போது 'யெகோவா' என்ற செயற்கை வார்த்தை வந்தது.

இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பியபோது எல்லா மனிதர்களும் பிதாவை கணம்பண்ணுவதுபோலவே குமாரனையும் கனம்பண்ணவேண்டும் என்பதே பிதாவுக்கு பிரியமாயிருந்து; அவ்வாறு செய்யத் தவறுவது என்பது பிதாவை கனவீனம்பண்ணுதலாய் இருந்தது (யோவான் 5:23). இதன் விளைவாக இப்பொழுது புதிய ஏற்பாட்டின் கீழ் ஒவ்வொரு விஷயமும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே செய்யப்படவேண்டியதாக உள்ளது (கொலோ *3:17*). "YHWH-

யாவே' என்ற பெயரானது கிறிஸ்துவின் யுகத்தில் எல்லா நாமத்திற்கும் மேலான இயேசுவின் நாமத்தால் பதிலீடு செய்யப்படவேண்டும் என்பதுதான் பிதாவின் நல்மகிழ்ச்சியாய் உள்ளது (பிலிபியர் 2:9). புதுயுகத்தில் முதல் நாளன்று ஆவியினால் ஏவப்பட்ட பேதுரு மனம்திரும்புதலையும் ஞானஸ்நானத்தையும் "YHWH-யாவே' என்ற நாமத்தில் அல்ல; மாறாக இயேசுகிறிஸ்துவின் நாமத்திலேயே கட்டளையிட்டார் (அப் 2:38). சமாரியாவில் பிலிப்புவின் பிரசங்கமானது "YHWH-யாவே' நாமத்தில் அல்ல; ஆனால் இயேசுகிறிஸ்துவின் நாமத்திலேயே அமைந்திருந்தது (அப் 8:12). உண்மையில் நாம் இரட்சிக்கப்படுவதற்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை (அப் 4:12). எபிரெய கல்வியாளர்கள் தேவனின் பெயரை "YHWH" என்று மொழிபெயர்ப்பு செய்வதற்கு முன்பு அவர்கள் அதனைச் "JHVH" என்று எழுதினர். பல ஆண்டுகளாக அந்த வார்த்தையின் உச்சரிப்பது பெரும் முயற்சியுடன் தவிர்க்கப்பட்டு அதற்கு பதிலாக 'LORD' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது. தேவன் தாம் விரும்பிய வழிமுறையில் புதிய ஏற்பாட்டை எழுத செய்துள்ளார். தம்முடைய குமாரனுக்கு எல்லாவற்றிற்கும் முந்திய முதலிடம் கொடுத்துள்ளார் (கொலோ 1:18). தேவன் இன்றைய நாளில் எல்லா மனிதர்களும் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்வதன் மூலம் கிறிஸ்துவை கனப்படுத்தவேண்டும் என்று விரும்புகின்றார் (1 பேதுரு 4:16). இப்பொழுது எல்லா மக்களும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பிதாவாகிய தேவனுக்கு நன்றி செலுத்தும்படி கட்டளையிடப்பட்டுள்ளனர் (எபே 5:20)

**'YHWH-யாவே' வின் கூட்டு பெயர்கள்:**

a. யாவே ஏலோஹிம் - தேவனாகிய கர்த்தர். நாசரேத்தூர் இயேசுவானவர் 'யாவே' ஆக இருக்கின்றார். மனிதப்பிறவிக்கு மேலானவர் என்ற சிந்தனையானது மெய்சிலிர்க்கச் செய்கின்றன. அவர் மனிதராக இருந்த போதிலும் மற்ற மனிதர் எவரையும் போலின்றி பெத்லகேமில் பிறப்பதற்கு சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு ஆபிரகாம் வாழ்வதற்கு முன்பே அந்த காலத்தில் இயேசு 'வார்த்தை' என்ற தேவனாக இருந்தார் (யோவான் 1:1-3). தேவன் மோசேயிடம் தம்மைப்பற்றி அடையாளப்படுத்த பயன்படுத்திய 'இருக்கிறவராக இருக்கிறேன்' என்ற அதே மொழிநடையை எருசலேமிலிருந்த யூதர்களிடத்தில் இயேசுகிறிஸ்துவுக்கு பயன்படுத்தியிருக்கமுடியும் (யோவான் 8:58). இயேசு தம்முடைய பிதாவின் இயல்புடையவராகவே இருந்தார்; அவர் தேவனைக்காட்டிலும் பிதாவை காட்டிலும் சிறியவர் அல்ல.

b. அடோனாய் யாவே - கர்த்தராகிய ஆண்டவர் (ஆதி 15:2). ஆதியாகமம் 15ல் கர்த்தர் என்ற வார்த்தையை ஆபிரகாம் மேன்மை, மகத்துவம் மற்றும் மரியாதை ஆகியவற்றிற்கு உரியவரான எல்லாவற்றிற்கும் கர்த்தர் மற்றும் ஆண்டவராயிருப்பவருக்கு பயன்படுத்தினான். ஆபிரகாமுக்கு 'வெகுமதி' அளிப்பவர் என்ற 'தேவனின் வாக்குத்தத்தம்' என்ற சந்தர்ப்பபொருளில் கர்த்தராகிய ஆண்டவரே முழு பொறுப்பாளராக இருந்ததை ஆபிரகாம் புரிந்து கொள்ளத்தொடங்கினார். 85 வயதான தனக்கும் 75 வயதான மலடியாக இருந்த தன் மனைவிக்கும் 'வெகுமதி' அளிப்பார் என்று ஆபிரகாம் விசுவாசித்தார்.

c. யாவே யீரே - கர்த்தர் பார்த்துக்கொள்வார். ஆதியாகமம் 22:14ல் தெய்வீகத்திற்கு ஆபிரகாம் இந்த பெயரை பயன்படுத்தினான். 'தேவையானவற்றை கர்த்தர் அருளிச்செய்வார்' என்று ஆபிரகாம் தேவனிடத்தில் நம்பிக்கையாய் இருந்தார். விசுவாசத்தின் மனிதரான ஆபிரகாம் ஈசாக்கிடம் தேவன் தகனபலிக்கான ஓர் ஆட்டுக்குட்டியை தருவார் என்று கூறினார் (ஆதி 22:18). தேவனுடைய அருள் இரக்கத்தை அவர் அனுபவித்த பொழுது ஆபிரகாம் இருதயத்தில் ஏற்பட்ட சந்தோஷத்தை சொல்லி முடியாது. சில வேளைகளில் சிறந்த மனிதர்களுக்கு 'சிட்சித்தல்' தேவைப்படுகின்றது (எபி 6:2-6, 11). பிதாவின் கவனிப்பில் எல்லையற்ற வகையில் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ள குழந்தையைப் போல பவுல் தேவன் நமக்கு அளித்த எல்லாவற்றையும் தமது நன்மைக்காக ஏற்றுக்கொண்டார் (பிலி 4:.11, 12).. கிறிஸ்தவர் தனது திராணிக்கு மிஞ்சி சோதிக்கப்படுவதற்கு அவர் இடமளிக்கமாட்டார் மற்றும் அதிலிருந்து அவர் தப்பி கொள்ளும்படியான போக்கு ஒன்று எப்போதும் திறந்திருக்கும்படி பார்த்துக்கொள்ளுகிறார் (1 கொரி 10:13). ஆபிரகாமுக்கு அத்தியாவசியமான தேவை ஏற்பட்டபொழுது 'யாவா யீரே' ஓர் ஆட்டுக்கடா அருளிச்செய்தது போலவே மனிதகுலம் முழுவதும் நம்பிக்கை இழந்த நிலையில்

தேவை ஏற்பட்டபொழுது அதே 'யாவா யீரே' ஒரு விசேஷித்த வகையில் தேவஆட்டுக்குட்டியை (கிறிஸ்துவை) அருளிச்செய்தார்.

d. யாவே நிசி - கர்த்தர் எனது கொடியாய் இருக்கின்றார். மோசே ஆடுகளை மேய்க்க வைத்திருந்த கோல் மிகவும் புகழ்பெற்றதாயிற்று. மோசே அதை தரையில் எறிந்தபொழுது தேவனுடைய வல்லமையானது அதை ஒரு சர்ப்பமாக மாற்றியது (யாத் 4:3). அவர் அதை கையில் எடுத்தபோது அது மறுபடியும் ஒரு தடியாயிற்று. இந்த அற்புத வல்லமையானது தேவன் உண்மையிலேயே மோசேக்கு தரிசனமானார் என்று எபிரெயர்கள் நம்பி ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கானதாகும். இந்த அற்புதம் நிகழ்த்தப்பட்டபொழுது மக்கள் விசுவாசித்து தங்கள் தலைகளை வணங்கி தொழுதார்கள் (யாத் 7:10). அது போலவே அந்த கோலானது மோசே மற்றும் ஆரோன் மூலமாக தண்ணீரை இரத்தமாகவும், தவளைகளை திரளாய் பெருக செய்யவும், தூசியை பேன்களாகவும், மணலை ஈக்களாகவும், இடி கல்மழையை அனுப்பவும், பூமியில் அக்கினி ஓடசெய்யவும் மற்றும் வெட்டுக்கிளி பாதை ஒன்றை உண்டாக்கவும் தேவனால் பயன்படுத்தப்பட்டது (யாத் 7:15-10:13). இது அனேகமாக மூன்று நாட்கள் காரிருளை அறிவிப்பதும் ஒரு பங்கு வகித்து இருக்கலாம். மோசே தமது கோலை உயர்த்தி செங்கடலுக்கு மேலாக தமது கையை நீட்டியபோது கடலானது பிரிந்துபோயிற்று; இதை செயல்முறையானது செங்கடலை மறுபடி மூடுவதற்கு பயன்படுத்தப்பட்டது. பிறகு வனாந்தரத்தில் மோசேயின் கோலினால் அடிக்கப்பட்ட கன்மலையிலிருந்து பீறிட்டு வந்த தண்ணீரினால் திருப்தி அடைந்தனர் (எண் 20:11). இஸ்ரவேலர்கள் தாக்கப்பட்டபொழுது மோசே தமது கோலை உயர்த்தி பிடித்திருந்தவரையிலும் அவருடைய மக்கள் யுத்தத்தில் ஜெயித்தனர். மோசேயின் கைகள் தளர்ந்து போனதால் அவர் ஓய்வுக்காக தாழ்த்தியபொழுது பகைவர்களின் படையானது மேற்கொண்டது. ஊர் மற்றும் ஆரோன் அவரின் இரு புறத்திலும் நின்றுகொண்டு சூரியன் மறையும் வரையிலும் மோசேயின் கைகளைத் தாங்கி நிறுத்தி வெற்றியை உறுதிசெய்தனர். கொடுக்கப்பட்ட வெற்றியை கொண்டாடுவதற்காக மோசே ஒரு பலிபீடத்தைக் கட்டி அதற்கு 'யாவே நிசி' என்று பெயரிட்டார் (யாத் 17:15). மற்ற நோக்கங்களுக்காக மிகவும் உதவியாய் இருந்த அந்தக் கொலை இப்பொழுது மோசே ஒரு 'கொடி' என்று அழைத்தார். இவ்விதமாக மோசே இஸ்ரவேலர்கள் தங்கள் சுய பலத்தினால் யுத்தத்தில் வெற்றி கொள்ளவில்லை என்றும் தேவனே வெற்றியை கொடுத்திருந்தார் என்றும் அறிவித்தார். அமலேக்கியர்மேல் கொண்டிருந்த வெற்றியை பார்க்கிலும் பாவம் மற்றும் கல்லறை ஆகியவற்றின் மேல் இயேசுவின் வெற்றியானது மிகவும் தனிச்சிறப்புடையதாக இருந்தது. அவரும்கூட 'யாவே நிசி' யாக - 'கர்த்தர் எனது கொடியாக இருக்கிறார்' என்பதாக உள்ளார்.

e. யேகோவா ஷாலோம் - கர்த்தர் சமாதானமாய் இருக்கின்றார். கிதியோன் தேவனுடைய தூதனை முகமுகமாய் தரிசித்ததை உணர்ந்தபொழுது தான் அழித்துவிடுவோம் என்று பயந்தான். ஆனால் கர்த்தர் 'உனக்குச் சமாதானம்' பயப்படாதே நீ சாவதில்லை என்று கூறி அவனைத் தப்புவித்தபோது மதிப்புணர்வினால் ஒரு பலிபீடத்தைக் கட்டி அதை 'யாவே ஷாலோம்' - 'கர்த்தர் சமாதானமாய் இருக்கின்றார்' என்று அழைத்தான் (நியா 6:24). நாம் பாவிகளாயிருக்கையில் நமது பாவங்களில் அழியாமல் இருக்கும்படியாக சமாதானமாய் இருக்கிற கர்த்தர்; சமாதான பிரபுவானவர் தமது சிலுவையில் சிந்திய இரத்தத்தினால் சமாதானம் ஏற்படுத்தும்படி அவரை அனுப்பினார்.

f. யேகோவா ஷாபாத் - சேனைகளின் கர்த்தர். இந்த சொற்றொடரானது தேவனுடைய கட்டுப்பாட்டில் உள்ள இயற்கையின் திரளான விஷயங்கள் மனிதர்களின் சேனைகள் மற்றும் மிக ஏராளமான தூதர்கள் ஆகியோரை குறிக்கின்றது. தேவனிடத்திலிருந்து புறப்படுகின்ற எல்லையற்ற வல்லமையானது அவரது ஆணையை செய்யத்தயாராக உள்ள திரளான எண்ணிக்கையிலானவர்களாய் சித்தரிக்கப்படுகின்றது. தாவீது கோலியாத்தை அழைக்கையில் கூறிய சொற்களின் ஆதிக்கமும் இதுவேயாகும். …நானோ நீ நினைத்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளின் கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன் (1 சாமு 17:45). இதே தேவன்தான் வானத்தின் சர்வசேனைகளையும், சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் ஆளுகின்றார் (உபாகமம் 4:19; சங்கீதம் 33:6). இவர் கணக்கற்ற தூதர்களால் ஆராதிக்கபடுகின்றார் (ஆதி 32:1, 2; சங் 103: 20,21; 148:2; வெளி 5:11).

- யாவே ஷிட்கேனு - நமது நீதியாய் இருக்கிற கர்த்தர் (எரேமியா 23:6)..
- யாவே ஹோசீனு - நம்மை உண்டாக்கின கர்த்தர் (சங்கீதம் 95:6)

- யாவே யேகோவா மெக்கடிஷ்கெம் - பரிசுத்தமாக்குகிற கர்த்தர் (யாத்திரையாக 31:13)
- யாவே ராய் - மேய்ப்பராகிய கர்த்தர் (சங்கீதம் 23:1)
- யாவே ரப்பா - சுகமாக்குகிற கர்த்தர் (யாத்திராகமம் 15:26)
- யாவே ஷம்மா - நம்மோடு இருக்கிற கர்த்தர் (எசே 48:35)
- யாவே ஷம்மர் - காப்பாற்றுகிற கர்த்தர் (சங்கீதம் 121:5)
- யாவே ஆஷா - இரட்சகராகிய கர்த்தர் (ஏசாயா 60:16)
- யாவே ஷேலி - கன்மலையாகிய கர்த்தர் (சங்கீதம் 18:2)

இந்த கூட்டுப் பெயர்கள் எல்லாம் தேவனின் கூடுதல் பெயர்கள் அல்ல ஆனால் பெரும்பாலும் நினைவு கூறத்தக்கதான நிகழ்வுகளிலிருந்து வளர்ந்த பெயர்கள் அல்லது தலைப்புகளே ஆகும். இருப்பினும் இவைகள் தேவனின் தன்மையின் கூடுதல் அம்சங்களை வெளிப்படுத்துகின்றன.

g. மாலக் யாவே - கர்த்தருடைய தூதன் (ஆதி 16:7).
மாலக் எலோஹிம் - கர்த்தருடைய தூதன் (நியா 6:20, 21)

சிலர் இவரை தெய்வீகமானவர் அல்ல; ஒரு விசேஷித்த தூதன்; தெய்வீகத்துவத்தின் விவரிப்பு அதாவது தேவனுடைய நாமத்தினாலே அதிகாரத்துடன் பேசுவதற்கு தேவன் அனுப்பிய ஒரு விசேஷித்த பிரதிநிதி என்கிறார்கள். ஆனால், வசனங்களின் அடிப்படையில் பார்க்கும்போது அவர் தேவன் என்பதும் அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துதான் என்பதும் தெளிவாகும். கர்த்தருடைய தூதனானவர் தெய்வீக பண்புகளை உடையவராய் இருந்தார்.

- தேவன் மட்டுமே செய்யமுடிந்த வாக்குத்தத்தத்தை அவர் கொடுக்கிறார் (ஆதி 16:10)
- அவர் எதிர்காலத்தை முன்னுரைகிறார் (ஆதி 16:12)
- அவர் மன உருக்கமுள்ளவராக இருந்தார் (ஆதி 18:23-32)
- அவர் நியாயத்தீர்ப்பை செய்தார் (ஆதி 18:1-33)
- அவர் வானத்திலிருந்து பேசினார் (ஆதி 22:11)
- அவர் செழிப்பை தர முடிந்தது (ஆதி 24:7, 40)
- அவர் சொப்பனத்தில் தோன்றினார் (ஆதி 31:11)
- அவர் சர்வவியாபியாய் இருந்தார் (ஆதி 31:12)
- அவர் மனிதர்களை தீமையிலிருந்து இரட்சித்தார் (ஆதி 48:16)
- அவர் இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களை செய்தார் (யாத் 3:1-4)
- அவர் ஆராதிக்கப்பட்டார் (யாத் 3:1-5).

ஆனால் சாதாரண தூதர்கள் ஆராதனையை ஏற்கவில்லை (வெளி 19:10; 22:8 9). ஆனால் சிலர் கர்த்தருடைய தூதன் தாம் ஆராதிக்கப்படுவதை மறுத்தார் என்று நியாயாதிபதிகள் 13:16 ம் வசனத்தை குறிப்பிடுகிறார்கள். நியாயாதிபதிகள் 13:6ம் வசனத்தின்படி மனோவா அவரை அதாவது கர்த்தருடைய தூதனை 'கர்த்தர்' என்று அறியாமல் ஒரு தேவமனுஷனாகவே நினைத்தான். அதனால் கர்த்தருடைய தூதனானவர் மனோவாவிற்கு தம்மை 'கர்த்தர்' என்று அறிந்துகொள்ளும்படியாக 'உன் பலியை கர்த்தருக்கு செலுத்து' என்று கூறுகிறார். அப்படி அவன் செலுத்தியபோது (வச. 19) கர்த்தருடைய தூதனானவர் ஜுவாலையிலே ஏறிப்போனார் உடனே மனோவாவும் அவனது மனைவியும் முகங்குப்புற விழுந்தார்கள் என்று (வச.20) வாசிக்கிறோம். அவர் 'ஜுவாலையிலே ஏறிப்போனார்' என்பதின் அர்த்தம் அந்த பலியை சுகந்தவாசனையாக முகர்ந்தார். நியாயாதிபதிகள் 13:16 இல் அவர் மறுப்பு சொல்ல காரணம் தாம் தேவன் இல்லை என்பதற்காக அல்ல; மாறாக மனோவா தன்னை கர்த்தர் என்று அறியாதபடியால்தான். அவன் அறிந்தபிறகு ஆராதனையை கர்த்தருடைய தூதனானவர் ஏற்றுக்கொண்டார்.

- மேலும் இவர் நேரடியாகவே ஆகாரின் மூலமாக தேவன் என்று அழைக்கப்பட்டார் (ஆதி 16:13).

ஓசியா 12:3-5 - இங்கே தூதனானவரோடு சம்பந்தப்படுத்தி இரண்டு பின்னணிகள் சொல்லப்படுகிறது. யாக்கோபு தன் பலத்தால் தேவனோடு போராடினான்; அவன் தூதனானவரோடே போராடி மேற்கொண்டான் என்று வாசிக்கிறோம் (வச.3,4)

- யாக்கோபு தேவதூதனானவரோடு போராடியதும் கெஞ்சுவதும் ஆதியாகமம் 32: 22-30 வரையிலான வசனத்தின் நிகழ்ச்சி.

- தூதனானவர் வழியிலே பெத்தேலில் அவனை சந்தித்ததும் பேசினதும் ஆதியாகமம் 28:10-19 ஆம் வசனம் வரையிலான உள்ள நிகழ்ச்சி.

ஆவியானவர் ஆதியாகமம் 32ல் வருகிற தூதனை 'தேவன்' என்றே சொல்கிறார். 4ஆம் வசனத்தின் முற்பகுதியும் அந்த தேவன்தான் 'தேவதூதனானவர்' என்றும் தெளிவாக சொல்கிறது. மேலும் 4 மற்றும் 5-ம் வசனத்தில் வருகிற 'அவரை', 'அவர்' மற்றும் 'அவருடைய' என்ற பிரதி பெயர்ச்சொற்கள் எல்லாம் 'தூதனானவர்' என்கிற பெயரைத்தான் சுட்டிக்காட்டுகின்றன.

இதில் பெத்தேலிலே அவர் அவனை கண்டு சந்தித்து என்பது ஆதியாகமம் 28:13 நிகழ்ச்சி. அந்த நிகழ்வில் யாக்கோபை சந்தித்துப் பேசியது 'கர்த்தர்' தான் என்று ஆதியாகமம் 28:13 சொல்கிறது. ஆனால் இங்கே பெத்தேலிலே கண்டு பேசியது 'தூதனானவர்' என்பதை 'அவர்' என்கிற பிரதிபெயர்ச்சொல் சுட்டிக்காட்டுகிறது.

நான்காவதாக புதிய ஏற்பாட்டில் கர்த்தருடைய தூதனானவர் எங்குமே தோன்றவில்லை காரணம் கர்த்தருடைய தூதனாக தோன்றிய கிறிஸ்துவே புதிய ஏற்பாட்டில் மனிதனாக வந்து விட்டார் ஆகவே அதற்கு அவசியமில்லாமல் போனது.

ஐந்தாவதாக பிதாவாகிய தேவன்தான் 'கர்த்தருடைய தூதனானவரை' அனுப்பினார் (1 நாளா 21:15). அதே பிதாவானவர்தான் 'குமாரனை' அனுப்பினார் (யோவான் 4:34).

இறுதியாக 1 கொரி 10:1-12 வரையிலான வசனங்களில் இஸ்ரவேல் மக்களோடு கிறிஸ்து இருந்தார் என்று பவுல் குறிப்பிடுகிறார் (யாத் 13:21; 14:19). அவர்கள் இரவும் பகலும் வழிநடக்கக்கூடும்படிக்கு கர்த்தர் அவர்களை பகலிலே வழிநடத்த மேகஸ்தம்பத்திலும் இரவில் அவர்களுக்கு வெளிச்சம் காட்ட அக்னிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார்; அதாவது 'கர்த்தர்' அவர்களுக்கு முன்சென்றார். அடுத்தபடியாக 14:19ல் "அப்பொழுது இஸ்ரவேலரின் சேனைக்கு முன்னால் நடந்த 'தூதனானவர்' விலகி அவர்களுக்கு பின்னால் நடந்தார். அப்போது அவர்களுக்கு முன் இருந்த மேகஸ்தம்பம் விலகி அவர்கள் பின்னே நின்றது"

- கர்த்தர் முன் சென்றார் (13:21)
- முன்னாக நடந்த தேவதூதனானவர் (14:19)

இங்கே கர்த்தரும்; தேவதூதனானவரும் ஒருவரே. ஆகவே கர்த்தருடைய தூதனானவர் இயேசுகிறிஸ்துவாகிய தேவனே ஆவார்.

**அடோனாய்**

அடோனாய் - ஆண்டவர். 'ஏலோஹிம்' போன்று 'அடோனாய்' என்பதும் ஒரு பன்மை பதமாகும். ஒருமையில் இதன் அர்த்தம் 'கர்த்தர்', 'எஜமான்', 'உரிமையாளர்' என்பதாகும் (ஆதி 19:2; 40:1; 1 சாமு 1:15). இது மனிதர்களுக்கு இடையிலான உறவை போன்றதாய் இருக்கிறது அதாவது எஜமான் மற்றும் அடிமை உறவு முறையை போன்றதாய் இருக்கிறது (யாத் 21:1-6). மனிதர்களுக்கான தொடர்பில் இதை பயன்படுத்தும்போது அது தேவனுடைய முழுமையான அதிகாரத்தின் கருத்தை வெளிப்படுத்துகிறது.

- கர்த்தருடைய சேனையின் அதிபதியானவரின் ஆணைக்கு யோசுவா கீழ்ப்படிந்தான் (யோசுவா 5:14)
- ஏசாயா தம்முடைய ஆண்டவராகிய கர்த்தருடைய ஆணைக்கு தன்னை அர்ப்பணித்தார் (ஏசாயா 6:8-11)

புதிய ஏற்பாட்டின் 'குரியோஸ்' (Kurios) அதாவது 'கர்த்தர்' என்ற பதமானது இந்த 'அடோனாய்' என்ற பதத்திற்கு இணையானதாக இருக்கிறது.